வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் CC. No. 299/2022

வழக்கு சாட்சி – PW 6

| | | | |
|---|---|---|---|
| பெயர் :: | திருமதி.மஜ்மா பேகம் | தொழில் :: | |
| த/பெ பெயர் :: | | வயது :: | |
| கிராமம் :: | | | |
| தாலுகா :: | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 22.08.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை** (நேரம் : காலை 11.50 மணி)

நான் தற்போது சித்தார்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம். சாட்சிகள் உவைசுல் கரீம், முகமது ரைசுதீன், முஸ்தபா கமால், அசாருதீன், ஜாகீர் உசேன் ஆகியோர்களை தெரியும். வாகன விபத்தில் இறந்துபோன காஜாமுகைதீன் எனது தகப்பனார். 13.06.2020ம் தேதி காலை 10.00 மணிக்கு சித்தார்கோட்டையிலிருந்து இராமநாதபுரத்திற்கு மளிகை சாமான்கள் வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தில் எனது தகப்பனார் சென்றார். மதியம் சுமார் 02.30 மணியளவில் என் தம்பி முஸ்தபா கமால் எனக்கு போன் செய்து எனது தகப்பனாருக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக தகவல் சொன்னார். அவரை ஆம்புலன்சில் ஏற்றி இராமநாதபுரம், அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாக சொன்னார். உடனே நானும், என் கணவரும் இராமநாதபுரம், அரசு மருத்துமனைக்கு சென்று என் தகப்பனாரை பார்த்தோம். அங்கு அவர் இறந்துவிட்டதாக கூறி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்திருந்தார்கள். என் தகப்பனார் உடலை பிரேத பரிசோதனை செய்து மறுநாள் எங்களிடம் ஒப்படைத்தார்கள். என் அப்பா இராமநாதபுரத்திலிருந்து மளிகை சாமான்கள்

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2025.08.22 15:53:39 +0530

வாங்கி கொண்டு இருசக்கர வாகனத்தில் சித்தார்கோட்டைக்கு வரும்போது சமத்துவபுரம் அருகில் வைத்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். விபத்து சம்பந்தமாக என் தம்பி புகார் கொடுத்ததாக கேட்டு தெரிந்துகொண்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

விபத்து சம்பந்தமாக அன்றைய தினம் மதியம் 02.30 மணிக்கு எனக்கு போன் மூலம் தகவல் வந்தது. நானும், என் கணவரும் உடனே புறப்பட்டு 03.00 மணிக்கு மருத்துவமனை சென்றோம். அப்போது எங்கள் உறவினர்கள் மற்றும் போலீசார் மருத்துமனையில் இருந்தார்கள். விபத்து எவ்வாறு நடந்தது என்று போலீசாரிடம் நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை, நான் அந்த மனநிலையில் இல்லை. போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். விபத்தில் காயம்பட்ட நபர் யார் என்று அப்போது எனக்கு தெரியாது. விசாரித்ததில் அந்த நபர் பெயர் பாண்டித்துரை என்று சொன்னார்கள். அந்த விபரம் யார் சொன்னார்கள் என்று தெரியாது. என் அப்பா விபத்தில் இறந்துபோனது சம்பந்தமாக விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்து நஷ்ட ஈடு பெற்றுள்ளோம். என் அப்பாவின் கவனக்குறைவினால் எதிர் திசையில் சென்று மடையில் மோதி விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக போலீசார் சொல்லிக்கொடுத்து அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2025.08.22 15:53:48 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.